www.Padasalai.Net www.TrbTnpsc.com

TsI8T

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023

வகுப்பு 8

காலம்: 2.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 20)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 10×1=10

1) இயற்கையைப் போற்றுதல் தமிழர் ..............
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

2) செவ்விந்தியர்கள் நிலத்தை .............. மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

3) முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் .............. எனப்படும்.
அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

4) 'கலனல்லால்' என்னும் சொல்லை பிரித்தெழுதக் கிடைப்பது ..............
அ) கலன்+அல்லால் ஆ) கலன்+லல்லால்
இ) கலம்+அல்லால் ஈ) கலன்+னல்லால்

5) பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள்
இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்

6) 'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி
அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

7) காட்டை+எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............
அ) காட்டை எரித்து ஆ) காட்டையெரித்து
இ) காடு எரித்து ஈ) காடுயெரித்து

8) ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்ற இடம்
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை

9) 'மலர் பானையை வனைந்தாள்' - இத்தொடர் .............. பொருளைக் குறிக்கிறது.
அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

10) பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது
அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு

**கோடிட்ட இடத்தை நிரப்புக:** 5×1=5

11) சேரர்களின் நாடு .............. நாடு எனப்பட்டது.

12) எட்டாம் வேற்றுமை .............. வேற்றுமை என அழைக்கப்படுகிறது.

13) புற உலக ஆராய்ச்சிக்கு .............. கொழுக்கொம்பு போன்றது.

14) கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் .............. என அழைக்கப்பட்டன.

15) மாங்கனி நகரம் என அழைக்கப்படும் நகரம் ..............

**பொருத்துக:** 5×1=5

16) மட்பாண்டம் - தோன்றல் விகாரம்
17) மரவேர் - இயல்பு புணர்ச்சி
18) மணிமுடி - கெடுதல் விகாரம்
19) கடைத்தெரு - விளித்தொடர்
20) புலவரே வருக - திரிதல் விகாரம்

பகுதி - II (மதிப்பெண்கள் : 22)

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** 4×2=8

21) தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?

22) நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?

23) பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?

24) சோழனின் யானைப் படையைக் கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?

25) மழைச்சோறு பாடலில் உழவர்படும் வேதனை எவ்வாறு கூறப்படுகிறது?

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** 4×2=8

26) 'தமிழ்நாட்டின் ஹாலந்து' என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?

27) தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுது.

28) எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

29) மண்பாண்டம், சுடுமண் சிற்பம் - ஒப்பிடுக.

30) ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க:** 3×2=6

31) முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

32) அன்மொழித் தொகையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

33) சந்திப்பிழை என்றால் என்ன?

34) எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

**பகுதி - III (மதிப்பெண்கள் : 16)**

**எவையேனும் நான்கனுக்கு விடையளிக்க:** 4×4=16

35) தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாகச் சுந்தரர் கூறுவன யாவை?

36) நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

37) பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுது.

38) திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

39) ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று வேறுபாடு.

40) இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 8)**

**அடிமாறாமல் எழுதுக:** 4+2+2=8

41) "ஒருவர் ஒருவரின்" எனத் தொடங்கி ......... என நடுங்கியே என முடியும் வரையிலான படைவேழம் பாடலை எழுது.

42) "தக்கார்" - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

43) "விடல்" - என முடியும் திருக்குறளை எழுதுக.

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க:** 3×8=24

44) அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45) அ) 'காலம் உடன் வரும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' - கதையைச் சுருக்கி எழுதுக.

46) அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

**(அல்லது)**

ஆ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக:**

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.

**பகுதி - VI (மதிப்பெண்கள் : 10)** 5×2=10

47) **கலைச்சொல் தருக:**

அ) Herbs

ஆ) Consonant

48) **பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக:**

அ) பானையை உடைத்தது கண்ணன் அல்ல.

ஆ) மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.

49) **பின்வருவனவற்றுள் எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக:**

அ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 3.

ஆ) உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16.

50) **பறவைகளின் ஒலி மரபுச் சொற்களை எழுதுக:**

அ) காகம் ...............

ஆ) புறா ...............

51) **பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக:**

அ) பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்

ஆ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது

----------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com